# இலங்கை அரசாங்க மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் - 2012

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை அரசாங்க மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும்அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனதுநிதிசார் செயலாற்றலினையும்காசுப்பாய்ச்சலினையும்இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

**மேந்தலைக் கிரய உள்ளடக்கல்**

வரி மற்றும் இறைக் கட்டணங்கள், மின்சாரம், நீர்க் கட்டணம், காப்புறுதி, உபகரணங்களின் பேணல், பொதுவான பேணல்கள், கட்டிடங்களின் பேணுகை மற்றும் தேய்வுகள் போன்ற மேந்தலை கிரயங்களில் 90 சதவீதத்தினை உற்பத்திக் கிரயமாகவும் எஞ்சிய 10 சதவீதத்தினை நிர்வாக செலவினமாகவும் உள்ளடக்குதல் கூட்டுத்தாபனத்தின் கொள்கையாகும்.

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கூட்டுத்தாபனத்தின் கட்டிடங்களில் 70 சதவீதமானவை உற்பத்திப் பிரிவிற்காக பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும்,ரூபா 31,105,624 கட்டிட பெறுமானத் தேய்வில் 90 சதவீதத்திற்குச் சமனான பெறுமதியாகிய ரூபா 27,995,061 உற்பத்திக் கிரயத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தது. அதன் விளைவாக ஏறத்தாழ ரூபா 6,221,124 தொகையான பெறுமானத்தேய்வு உற்பத்திக் கிரயத்தில் கூடுதலாக உள்ளடக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்குரிய தளபாடங்கள் பொருத்துக்களிற்கான பெறுமானத் தேய்வில் 32 சதவீதமும், உபகரண பெறுமானத் தேய்வில் 11 சதவீதமும், கணனி மற்றும் துணைப்பாகங்களின் பெறுமானத் தேய்வில் 12 சதவீதமுமாக மொத்தம் ரூபா 3,089,303 பெறுமானத்தேய்வு உற்பத்திக் கிரயத்தில் உள்ளடக்கப்பட வேண்டிய போதிலும், தளபாடங்கள் பொருத்துக்கள், உபகரணங்கள், கணனி மற்றும் துணைப்பாகங்களின் பெறுமானத் தேய்வில் 90 சதவீதத்திற்குச் சமனான பெறுமதியாகிய ரூபா 21,866,469 உற்பத்திக் கிரயத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தது. அதன் விளைவாக தளபாடங்கள் பொருத்துக்கள், உபகரணங்கள், கணனி மற்றும் துணைப்பாகங்களின் பெறுமானத் தேய்வின் மொத்தம் ரூபா 18,777,166 உற்பத்திக் கிரயத்தில் கூடுதலாக உள்ளடக்கப்பட்டிருந்தது.

### 1.2.2 கணக்காய்விற்கான சான்றின்மை

வியாபார மற்றும் ஏனைய செலுத்தவேண்டியவைகளின் கீழ் உள்ளடங்கியிருந்த 86 தனியார் நிறுவனங்களிற்குச் செலுத்தப்பட வேண்டியுள்ள ரூபா 55,159,247 தொகையில் 72 நிறுவனங்களிற்குச் செலுத்தவேண்டிய ரூபா 52,837,397 தொடர்பில் உறுதிப்படுத்தல்கள் கிடைக்கப்பெற்றிருக்கவில்லை.

### 1.2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றிற்கான தொடர்பு | இணக்கமின்மைகள் |
| --- | --- |
| (அ) 2009 மார்ச் 09 ஆந் திகதிய டீஎம்எஸ்/ஈ4/10/4/090/2 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் சுகாதார செயலாளருக்கு அனுப்பியிருந்த கடிதம் | |

| | |
|---|---|
| (i) 02-01 ஆம் இலக்க பந்தி | நிறைவேற்று மற்றும் நிறைவேற்றுத் தரமற்ற சகல உத்தியோகத்தர்களுக்கும் தூரத்தின் அடிப்படையில் பயணப் படியினை செலுத்துவதற்குப் பதிலாக அவர்களிற்கு முறையே மாதாந்தம் ரூபா 4,700 மற்றும் ரூபா 3,000 வீதம் நிலையான பயணப் படி செலுத்தப்பட்டிருந்தது. |
| (ii) 02-01(1) ஆம் இலக்க பந்தி | கூட்டுத்தாபனத்தினால் குழுப் போக்குவரத்து வசதி வழங்கப்பட்டிருந்த வீதிகளின் அருகாமையில் குடியிருக்கும் ஊழியர்களுக்கும் பயணப் படி செலுத்தப்பட்டிருந்தது. |
| (iii) 02-02 ஆம் இலக்க பந்தி | மாதாந்தம் ரூபா 4,000 வீதம் செலுத்தக்கூடிய உச்ச உற்பத்தி ஊக்குவிப்புப்படி ரூபா 9,600,000 தொகையான போதிலும், அதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரமின்றி 2011 யூலை 01 ஆந் திகதி முதல் மாதத்திற்கு ரூபா 12,000 வீதம் 200 பேரைக் கொண்ட மொத்த பதவியணியினருக்காக ரூபா 19,300,515 செலுத்தப்பட்டிருந்தமை காரணமாக கூடுதலாகச் செலுத்தப்பட்டிருந்த உற்பத்தி ஊக்குவிப்புப் படி ஏறத்தாழ ரூபா 9,700,515 ஆகும். |
| (ஆ) பொது முயற்சிகள் திணைக்களச் சுற்றறிக்கை | |
| (i) 1998 மார்ச் 18 ஆந் திகதிய பீஈடீ 13 ஆம் இலக்க சுற்றறிக்கை | பொது முயற்சிகள் திணைக்களத்தின் அங்கீகாரமின்றி ஊழியர் கடன் வட்டி வீதத்தினை 7 சதவீதத்திலிருந்து 4.2 சதவீதமாகக் குறைத்து கடன் வட்டி அறவிடப்பட்டிருந்தமை காரணமாக குறைவாக அறவிடப்பட்டிருந்த வட்டி வருமானம் அண்ணளவாக ரூபா 1,110,450 ஆகக் காணப்பட்டது. |
| (ii) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க சுற்றறிக்கை | |
| 6.5.2 ஆம் இலக்க பந்தி | ஆண்டறிக்கையினை நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட வேண்டிய போதிலும், 2011 ஆம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கை 2013 மார்ச் 31 ஆந் திகதி வரை பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. |

| | |
|---|---|
| 6.5 ஆம் பந்தி | வரைபு வருடாந்த அறிக்கை நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்க வேண்டிய போதிலும், மீளாய்வாண்டிற்கான வரைபு வருடாந்த அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) 2011 பெப்ரவரி 11 ஆந் திகதிய பீஈடீ 57 ஆம் இலக்க சுற்றறிக்கை | அரச சார்பற்ற நிறுவனத்திற்கு அல்லது அரசாங்க அபிவிருத்திச் செயற்திட்டமல்லாத துறைக்கு மேற்கொள்ளப்பட்ட ரூபா 100,000 இற்கு மேற்பட்ட நன்கொடைகள் மற்றும் அனுசரணைகளிற்காக நிதி திட்மிடல் அமைச்சின் அங்கீகாரம் பெறப்பட வேண்டிய போதிலும், அதற்கு முரணாக 09 சந்தர்ப்பங்களில் நன்கொடைகள் மற்றும் அனுசரணைக் கொடுப்பனவுகளாக ரூபா 2,398,512 செலுத்தப்பட்டிருந்தது. |
| (iv) 2011 செப்தெம்பர் 15 ஆந் திகதிய பீஈடீ 58(2) ஆம் இலக்க சுற்றறிக்கை | தலைவரின் பிரத்தியேக செயலாளர், பணிப்பாளர் சபையின் செயலாளராகவும் பணியாற்றியமைக்காக மேலதிக படி எதுவும் செலுத்தப்பட முடியாத போதிலும், ஒரு தடவைக்கு ரூபா 2,500 வீதம் மீளாய்வாண்டில் ரூபா 25,000 தொகையும், 2011 ஆம் ஆண்டில் ரூபா 15,000 தொகையுமான மேலதிப் படிகள் செலுத்தப்பட்டிருந்தன. |
| (ஆ) 2000 ஜனவரி 31 ஆந் திகதிய பீஎப்/பீஈ/6 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கை | மீளாய்வாண்டிற்காக உரிய உத்தியோகத்தர்களால் செலுத்தப்பட வேண்டிய ரூபா 724,474 உழைக்கும் போதே செலுத்தும் வரி கூட்டுத்தாபனத்தினால் செலுத்தப்பட்டிருந்தது. |
| (இ) கொள்கைத் திட்மிடல் அமுலாக்கல்அமைச்சு செயலாளரினால் வெளியிடப்பட்ட அரசாங்க நிறுவனங்களில் சட்டரீதியான நடவடிக்கைகளுடன் தொடர்புடைய 1990 பெப்ரவரி 19 ஆந் திகதிய கடிதம் | சட்டமா அதிபரின் முன்கூட்டிய அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படாது தனியார் வழக்கறிஞர்களின் சேவைகளைப் பெற்றுக்கொண்டமைக்காக மீளாய்வாண்டில் கூட்டுத்தாபனத்தினால் ரூபா 130,000 செலுத்தப்பட்டிருந்தது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் படி 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கூட்டுத்தாபனத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளின் விளைவாகவரிக்கு முன்னர் ரூபா 117,136,719 தேறிய இலாபமொன்றானதுடன் அது முன்னைய ஆண்டிற்கான ரூபா 241,118,693 வரிக்குப் முன்னரான தேறிய இலாத்துடன் ஒப்பிடுகையில் ரூபா 123,981,974 குறைவொன்று காட்டப்பட்டது. மேலும், திறைசேரி உண்டியல்களிற்காக கிடைத்திருந்த ரூபா 31,843,823 வட்டி வருமானம் அடங்கலாக ரூபா 34,251,670 செயற்பாடற்ற வருமானத்தினைக் கணக்கிலெடுக்க முன்னர் மீளாய்வாண்டில் கூட்டுத்தாபனத்தால் ரூபா 82,885,049 தேறிய இலாபமொன்று ஈட்டப்பட்டிருந்தது. முன்னைய ஆண்டிற்கான ரூபா ரூபா 24,961,712 செயற்பாடற்ற வருமானத்தினைக் கணக்கிலெடுக்க முன்னரான தேறிய இலாபம் ரூபா 216,156,981 ஆக காணப்பட்டது. இதன்படி, செயற்பாடற்ற வருமானத்தைக் கணக்கிலெடுக்க முன்னரான தேறிய இலாபத்தினை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூபா 133,271,932 ஆல் அல்லது 62 சதவீதத்தால் குறைவொன்று காட்டப்பட்டது. மீளாய்வாண்டில் உற்பத்திக் கிரயம் அதிகரித்திருந்தமை மற்றும் விற்பனை விநியோகச் செலவினம் குறிப்பிடத்தக்களவு உயர்வடைந்தமையே நிதி விளைவுகளின் இக்குறைவிற்கு காரணமாகியிருந்தன.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

மீளாய்வாண்டிற்கான சொத்துக்கள் முகாமைத்துவ செயலாற்றல் பகுப்பாய்வு செய்யப்பட்டு கீழே காட்டப்பட்டுள்ளது.

(அ) இலாபத்தன்மை விகிதங்கள்

| | | ஆண்டு | |
|---|---|---|---|
| | | 2012 | 2011 |
| மொத்த இலாப விகிதம் | நூற்றிற்கு | 13.7 | 21.0 |
| தேறிய இலாப விகிதம் | நூற்றிற்கு | 7.0 | 15.7 |

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

முன்னைய ஆண்டின் மொத்த இலாப மற்றும் தேறிய இலாப விகிதங்களுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான மொத்த இலாப மற்றும் தேறிய இலாப விகிதங்கள் குறைவடைந்திருந்தன.

(ஆ) திரவத்தன்மை விகிதங்கள்

| | ஆண்டு | |
|---|---|---|
| | 2012 | 2011 |
| நடைமுறை விகிதம் | 15.2 | 13.6 |
| விரைவு விகிதம் | 6.8 | 7.2 |

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

ஏற்றுக்கொள்ளப்பட்ட விகிதத்தினைக் காட்டிலும் மிகக் கூடிய திரவத்தன்மை விகிதங்கள் காணப்படுவதனால் மிகை தொழிற்படு மூலதனம் பயனுள்ள வழியில் பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(இ) தொழிற்பாட்டு விகிதங்கள்

| | 2012 | 2011 |
|---|---|---|
| இருப்புப் புரள்வு விகிதம் | 10 | 32.2 |
| இருப்புச் சுழற்சிக் காலம் - நாட்கள் | 37 | 11 |
| கடன்பட்டோர் புரள்வு | 5.2 | 7.9 |
| கடன்பட்டோர் புரள்வுக் காலம் - நாட்கள் | 70 | 46 |
| கடன்கொடுத்தோர் புரள்வு | 15.3 | 20.1 |
| கடன்கொடுத்தோர் புரள்வுக் காலம் - நாட்கள் | 24 | 18 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் இருப்புப் புரள்வு விகிதத்தின் பின்னடைவு 22.2 ஆகக் காணப்பட்டதுடன் இருப்புப் புரள்வுக் காலம் 26 நாட்களால் அதிகரித்திருந்தது. இதன் படி சிறந்த முகாமைத்துவத்தின் மூலம் இருப்பு பேணிவரப்பட்டிருக்கவில்லை.

(ii) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் கடன்பட்டோர் புரள்வு விகிதத்தின் பின்னடைவு 2.7 ஆகக் காணப்பட்டதுடன் கடன் சேகரிப்புக் காலம் 24 நாட்களால் அதிகரித்திருந்தது. இதன் படி கடன் சேகரிப்பு சிறந்த முகாமைத்துவத்தின் மூலம் பேணிவரப்பட்டிருக்கவில்லை.

(iii) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் கடன்கொடுத்தோர் புரள்வு விகிதத்தின் பின்னடைவு 4.8 ஆகக் காணப்பட்டதுடன் கடன் செலுத்துதல் காலம் 06 நாட்களால் அதிகரித்திருந்தது. இதன் படி கடன் தீர்த்தல் சிறந்த முகாமைத்துவத்தின் மூலம் பேணிவரப்பட்டிருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

#### (அ) உற்பத்தி நடவடிக்கைகள்

கூட்டுத்தாபனத்தினால் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 04 ஆண்டுகளில் உற்பத்தி செய்யப்பட்ட மருந்து வகைகள் தொடர்பான ஒப்பீட்டுத் தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| ஆண்டு | உற்பத்தி மருந்து வகைகளின் எண்ணிக்கை | உற்பத்தி |
|---|---|---|
| | | அலகு மில்லியன் |
| 2008 | 39 | 1032.6 |
| 2009 | 38 | 1195.2 |
| 2010 | 38 | 1614.1 |

| | | |
|---|---|---|
| 2011 | 37 | 1796.4 |
| 2012 | 40 | 1920.2 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மருந்து அலகுகளின் உற்பத்தி அதிகரிப்பு விகிதம் 2011 ஆம் ஆண்டில் 11.3 சதவீதமாகக் காணப்பட்டதுடன் மீளாய்வாண்டில் அது 7 சதவீதமாகக் காணப்பட்டமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் அதிகரிப்பு விகிதத்தில் 4.3 சதவீதக் குறைவொன்று காட்டப்பட்டது.

(ii) 2011 ஆம் ஆண்டில் உற்பத்திசெய்யப்பட்ட 37 வகையான மருந்துகளின் உற்பத்தி அலகுகளான 1796.4 மில்லியனுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் அந்த 37 மருந்து வகைகளின் கூட்டுமொத்த உற்பத்தி அலகுகள் 1755.1 மில்லியனாகும். அதன்படி முன்னைய ஆண்டில் உற்பத்திசெய்யப்பட்ட மருந்துகள் தொடர்பில் 41.3 மில்லியனால் மீளாய்வாண்டில் உற்பத்தி குறைவடைந்திருந்தது.

(iii) 2011 ஆம் ஆண்டில் 37 வகையான மருந்துகள் உற்பத்திசெய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டில் அவ் உற்பத்தி வகை 40 வரை அதிகரித்திருந்தது. இருப்பினும் அதில் 2 வகையான மருந்துகள் முன்னைய ஆண்டில் உற்பத்தி இடைநிறுத்தப்பட்ட மருந்துகளாக காணப்பட்டதுடன் அதில் ஒரு மருந்து மாத்திரம் புதிய உற்பத்தியாக காணப்பட்டது. புதிதாக உற்பத்திசெய்யப்பட்ட மருந்தில் மீளாய்வாண்டில் 1.5 மில்லியன் அலகுகள் உற்பத்தி செய்யப்பட்டிருந்தன. மேலும், அதன் ஆரம்ப ஆராய்ச்சி நடவடிக்கைகள் 2006 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் அதனை சந்தைப்படுத்துவதற்கு 06 ஆண்டுகள் எடுத்துக் கொள்ளப்பட்டிருந்தது.

(iv) மீளாய்வாண்டில் உற்பத்திசெய்யப்பட்ட 40 மருந்து வகைகளில் 5 மருந்து வகைகளின் மொத்த உற்பத்திக்கான பங்களிப்பு 0.4 சதவீதமாக மாத்திரம் காணப்பட்டதுடன் மொத்த உற்பத்தியில் 1057.05 மில்லியன் அலகுகள் அல்லது 54.99 சதவீதம் ஏழு மருந்து வகைகளினால் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

(v) 2005 ஆம் ஆண்டு முதல் 2013 ஏப்ரல் வரையான காலத்தில் ஆராய்ச்சி நிலையில் காணப்பட்ட மருந்து விடயங்களின் எண்ணிக்கை 10 ஆகக் காணப்பட்டதுடன் அந்த ஆராய்ச்சி நடவடிக்கைகளிற்காக 02 முதல் 07

ஆண்டுகள் வரையான காலம் எடுக்கப்பட்டிருந்தது. ஆய்வுகூட வசதிகள் போதியளவில் இல்லாமை, தேவையான பயிற்றுவிக்கப்பட்ட பதவியணியினர் இல்லாமை மற்றும் முறைப்படியான பயிற்சிகள் குறித்த பதவியணியினருக்கு கிடைக்காமை போன்றன இத் தாமதத்திற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தன.

**(ஆ) மருந்து உற்பத்திகளுக்கான இயந்திரங்களின் பயன்பாடு**

மருந்து உற்பத்தி நடவடிக்கைகளிற்காக கூட்டுத்தாபனத்தினால் 11 இயந்திரங்கள் மீளாய்வாண்டில் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருந்ததுடன் G.K.F. 800 ஆம் இலக்க இயந்திரம் மீளாய்வாண்டின் மார்ச், மே, ஆகஸ்ட் மற்றும் திசெம்பர் மாதங்களில் உற்பத்திக்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டில் அவ்வியந்திரத்தினால் Indometacin Cap BP 25 mg மற்றும் Chloramphenicol Cap BP 250 mg போன்ற 2 மருந்து வகைகள் மாத்திரம் உற்பத்தி செய்யப்பட்டிருந்ததுடன் ஆண்டின் இறுதியில் மேற்படி மருந்துகளில் முறையே 7.78 மில்லியன் அலகுகள் மற்றும் 11.18 மில்லியன் அலகுகளை விநியோகிப்பதற்கு கூட்டுத்தாபனம் தவறியிருந்தது.

**(இ) விற்பனை நடவடிக்கைகள் மற்றும் விலையிடல்**

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டில் கூட்டுத்தாபனத்தின் மாத்திரைகள் மற்றும் பூட்டு மாத்திரைகளின் விற்பனை தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| விற்பனை | மருந்து விற்பனை | | விற்பனைப் பெறுமதி | |
|---|---|---|---|---|
| | 2012 | 2011 | 2012 | 2011 |
| | ரூபா மில். | ரூபா மில். | ரூபா மில். | ரூபா மில். |
| அரசாங்க மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் | 492.4 | 546.7 | 412.4 | 424.0 |
| சுகாதார சேவைகள் பணிப்பளருக்கு | 1,203.9 | 1,244.3 | 1,000.7 | 1,006.8 |
| ஏற்றுமதி | 3.8 | - | 1.4 | - |
| ஏனையவை | - | 1.4 | - | 0.8 |

| | | | | |
|---|---|---|---|---|
| | 1,700.1 | 1,792.4 | 1,414.5 | 1,431.6 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) கூட்டுத்தாபனத்தினால் மீளாய்வாண்டில் அரசாங்க மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் மற்றும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு விற்பனை செய்யப்பட்டிருந்த மருந்து அளகுகளின் அளவு மற்றும் அவற்றின் பெறுமதிகள் மொத்த விற்பனைகளில் 99.8 சதவீதமாக காணப்பட்டது. இருப்பினும், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில்அரசாங்க மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் மற்றும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு விற்பனை செய்யப்பட்டிருந்த மருந்து அலகுகளின் எண்ணிக்கை முறையே 9.9 சதவீதத்தாலும் 3.2 சதவீதத்தாலும் குறைவடைந்திருந்தன. ஒட்டுமொத்தமாக முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மொத்த விற்பனைப் பெறுமதி 1.1 சதவீதத்தால் குறைவடைந்திருந்ததுடன் அதன் நிதிப் பெறுமதி ரூபா 17.1 மில்லியனாகும்.

(ii) மீளாய்வாண்டில் Diethlcarabamazine tab 50mg மருந்தில் 3.8 மில்லியன் அலகுகள் உற்பத்தி செய்யப்பட்டு ரூபா 1.4 மில்லியனிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டிருந்தது.

(iii) மருந்துகளின் விற்பனையைக் கருத்திற்கொள்கையில் மொத்த மருந்து விற்பனையில் 53 சதவீதம் 6 வகையான மருந்துகளில் தங்கியிருந்தது.

(iv) சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மற்றும் அரசாங்க மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் என்பவற்றால் கட்டளையிடப்பட்ட மருந்து வகைகளில் முறையே 389.4 மில்லியன் மற்றும் 193.61 மில்லியன் அலகுகள் மீளாய்வாண்டின் இறுதியில் விநியோகிப்பதற்காக எஞ்சியிருந்தது. 2011 ஆம் ஆண்டில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு விநியோகிக்கப்பட வேண்டிய 07 வகையான மருந்துகளில் 100.5 மில்லியன் அலகுகளும் 2012 ஆம் ஆண்டின் இரண்டாம் மற்றும் மூன்றாம் காலாண்டுகளில் விநியோகிக்கப்பட வேண்டிய 06 வகையான மருந்துகளில் 62.9 மில்லியன் அலகுகளும் இதில் உள்ளடங்கியிருந்தன.

(v) சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு மருந்துகளை விற்பனை செய்கையில் நியம உற்பத்திக் கிரயத்தின் மீது 12 சதவீத இலாப எல்லையினை சேர்த்து விலை தீர்மானிக்கப்படுகின்றது. இருப்பினும் மொத்த

நியம உற்பத்திக் கிரயத்தில் உள்ளடங்கியிருந்த கிரய மூலங்கள் எவையென இனங்காணப்படாது அதனுடன் தொடர்பற்ற கிரய மூலங்களை உள்ளடக்கி நியமக் கிரயம் கணிக்கப்பட்டிருந்தது. உதாரணமாக சேதமடைந்த மற்றும் பாவனைக்கு எடுக்கப்படாத பொருட்களின் கிரயம் நியமக் கிரயத்தின் கணிப்பீட்டிற்காக எடுக்கப்பட்டிருந்தது.

(vi) நியம உற்பத்திக் கிரயத்தின் மீது 12 சதவீத இலாப எல்லையினை சேர்த்து விலை தீர்மானிக்கப்பட வேண்டிய போதிலும், சில மருந்து வகைகளின் இலாப எல்லை 13 சதவீதம் முதல் 20 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. விலையிடுதலின் போது அங்கீகரித்த இலாப எல்லையை பயன்படுத்தியிருக்காமை காரணமாக மீளாய்வாண்டில் கணிப்பிடப்பட்டிருந்த இலாபம் சரியானதாக இருக்கவில்லை.

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மருந்து உற்பத்திக்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 8,137,215 கிரயப் பெறுமதி கொண்ட 6 மூலப்பொருள் விடயங்கள் உற்பத்திக்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| விடயம் | அளவு | பெறுமதி |
|---|---|---|
| | | ரூபா |
| E/H Gelatin capsules | 35.56 மில்லியன் அலகுகள் | 5,656,285 |
| Malaic Acid BP 2010 | 84 கிலோகிராம் | 115,572 |
| Sodium starch Glycalate BP 2010 | 2000 கிலோகிராம் | 771,080 |
| Asprin | 1100 கிலோகிராம் | 1,017,053 |
| Ferric oxide Red | 8.84 கிலோகிராம் | 17,939 |
| Bisacodyl BP | 55.5 கிலோகிராம் | 559,286 |

8,137,215

========

மருந்து உற்பத்திக்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த மேலே விபரிக்கப்பட்ட 06 மூலப்பொருள் வகைகளின் ரூபா 5,656,285 கிரயமானE/H Gelatin capsules மூலப்பொருள் இயந்திரத்தினால் ஏற்றுக்கொள்ளப்படாமையாலும்,ரூபா 1,576,339 கிரயங்கொண்ட Asprin மற்றும் Bisacodyl BP என்ற மூலப்பொருள்களில் குறைபாடுகள் காணப்பட்டமையாலும்,ரூபா 904,591 கிரயமான மூலப்பொருள்கள் நியதிகளிற்கமைவாக காணப்படாமை, நிறம் மாறியிருந்தமை மற்றும் காலாவதியாகியிருந்தமை போன்ற காரணங்களாலும் உற்பத்திக்கு பயன்படுத்த முடியாதிருந்தன.

நியதிகளிற்கமைவாக காணப்பட்ட போதிலும் இயந்திரங்களினால் ஏற்றுக் கொள்ளப்படாமையால் Malaic Acid BP 2010 இனை மாத்திரை உற்பத்திக்காக சிறிய அளவில் விநியோகித்தமையால் ஆவியாதல் மற்றும் வெப்ப உறிஞ்சல் காரணமாகவும்,Asprin மற்றும் Bisacodyl BP மூலப்பொருள்களில் காணப்பட்ட விருத்திச் செயற்பாடுகள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றமையாலும்,Feric oxide Red காலாவதியாகியிருந்த மையாலும் அவை சேதமடைந்திருந்ததுடன் Sodium Starch Glycalateதொடர்பான கிரயத்தினைவழங்குனரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக தலைவரினால் அறிவிக்கப்பட்டிருந்தது.

**(ஆ) மாத்திரை உற்பத்தி இயந்திரமொன்றை கொள்வனவு செய்தல்**

---

மாத்திரை உற்பத்தி இயந்திரமொன்றை கொள்வனவு செய்வதற்காக 2011 மார்ச் 29 ஆந் திகதி கேள்வி கோரப்பட்டிருந்ததுடன் ரூபா 91,026,700 தொகை பெறுமதிசேர் வரி அடங்கலாக மூன்றாவது குறைந்த விலை மனுவைச் சமர்ப்பித்திருந்த வழங்குனர் அமைச்சுக் கொள்வனவுச் சபையால் தெரிவுசெய்யப்பட்டிருந்தார். அதற்கான முற்பணமாக ரூபா 23,337,876 தொகை 2012 யூலை 16 ஆந் திகதி வழங்குனரின் உள்நாட்டு முகவருக்கு செலுத்தப்பட்டிருந்தது.

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) உடன்படிக்கையின் படி இயந்திரம் 2012 நவம்பர் மாதத்தில் விநியோகிக்கப்பட வேண்டிய போதிலும், ஒப்பந்தகாரின் கோரிக்கையின் படி அமைச்சுக் கொள்வனவுச் சபையால் 2013 மே 30 ஆந் திகதி வரை

ஒப்பந்த காலம் நீடிக்கப்பட்டிருந்தது. இத்திகதியிலும் இயந்திரத்தினை விநியோகிப்பதற்கு ஒப்பந்தக்காரர் தவறியிருந்தமையால் அது வரை செலுத்தப்பட்டிருந்த ரூபா 23,337,876 முற்பணத் தொகை, செயலாற்றல் பிணைமுறியிலிருந்து 2013 ஏப்ரல் 23 ஆந் திகதி அறவிடப்பட்டிருந்த போதிலும், 2013 யூன் 13 ஆந் திகதி மீண்டும் இம் முற்பணத் தொகைக்குச் சமனான தொகை அதாவது ரூபா 23,337,876 முற்பணமாக வழங்குனருக்குச் செலுத்தப்பட்டிருந்தது. இருப்பினும், 2013 ஒக்தோபர் 15 ஆந் திகதி வரை இவ்வியந்திரம் வழங்குனரால் விநியோகிக்கப் பட்டிருக்கவில்லை.

(ii) இதன்படி, முற்பணத் தொகை செலுத்தப்பட்ட 2012 யூலை 16 ஆந் திகதி முதல் அது மீண்டும் அறவிடப்பட்ட 2013 ஏப்ரல் 23 ஆந் திகதி வரை ரூபா 23.34 மில்லியன் தொகைக்குரிய அண்ணளவான ரூபா 2.28 மில்லியன் வட்டியினை அறவிடுவதற்கு 2013 ஒக்தோபர் 15 ஆந் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) கூட்டத்தாபனத்தால் மீளாய்வாண்டிற்கான ரூபா 81,780,582 வரிக்குப் பின்னரான இலாபத்தின் மீது செலுத்தப்பட வேண்டிய ரூபா 20,445,145 பங்கிலாபத்திற்காக (deemed dividend) ரூபா 20,000,000 பங்கிலாபமாக செலுத்தப்பட்டிருந்தது. கூட்டுத்தாபனத்தால் பங்கிலாபம் (deemed dividend) ரூபா 445,145 ஆல் குறைவாக செலுத்தப்பட்டமையின் விளைவாக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு குறைவாகச் செலுத்தப்பட்டிருந்த பங்கிலாபம் மீதான நிறுத்தி வைத்தல் வரியினை அறவிடுவதில் இடர் காணப்பட்டது.

## 3.3 சர்ச்சைக்குரிய கொடுக்கல்வாங்கல்கள்

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013 பெப்ரவரி 22 ஆந் திகதிய BP/18/13 ஆம் இலக்க பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் படி ரூபா 938,056 கிரயங்கொண்ட அழிவடைந்த பொதியிடல் பொருட்கள் மற்றும் ரூபா 172,394 தொகையான சேதமடைந்த மூலப்பொருள்களின் ரூபா 1,110,450 கூட்டுத்தொகை மீளாய்வாண்டின் இலாபத்திற்கெதிராக பதிவழிக்கப்பட்டிருந்தது.

(ஆ) அரசாங்க மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் மற்றும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் கூட்டுத்தாபனத்தில் உற்பத்திசெய்யப்படும் மருந்துகளின் பிரதான கொள்வனவாளர்களாக காணப்பட்ட போதிலும், கூட்டுத்தாபனத்தின் விற்பனை மேம்படுத்தல் செலவினமாக ரூபா 11,111,731 செலவிடப்பட்டிருந்தது. அதில் ரூபா 5,969,053 வானொலி மற்றும் செய்திப்பத்திரிகை விளம்பரத்திற்காக செலவிடப்பட்டிருந்தது. மேலும், 2011 இன் செலவினத்தைக் காட்டிலும் ரூபா 4,875,379 விற்பனை மேம்படுத்தல் செலவினமாக செலவிடப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டிற்கான விற்பனையை முன்னைய ஆண்டிற்கான விற்பனையுடன் ஒப்பிடுகையில் அது ரூபா 17,108,468 ஆல் குறைவடைந்திருந்தது. இதன்படி விற்பனை மேம்படுத்தல் செலவினமாக செலவிடப்பட்டிருந்த கிரயம் பயனுள்ள விதத்தில் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 3.4 ஒப்பந்த நிர்வாகக் குறைபாடுகள்

### 3.4.1 உற்பத்திப் பொதிகள் மற்றும் களஞ்சிய வசதிகளுக்காக கட்டிடம் நிர்மாணித்தல்

2009 ஆம் ஆண்டில் திறந்த கேள்வி கோரல் மூலம் பெறுமதிசேர் வரி நீங்கலாக ரூபா 72,152,252 குறைந்த விலையினை சமர்ப்பித்திருந்த ஒப்பந்தகாரருக்கு நிர்மாண ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தது.

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஒப்பந்த உடன்படிக்கையின் படி, நிர்மாண வேலைகள் 2010 ஆகஸ்ட் 08 ஆந் திகதி முடிவுறுத்தப்பட வேண்டிய போதிலும், 2013 ஒக்தோபர் 15 ஆந் திகதி வரை நிர்மாண வேலைகள் பூர்த்திசெய்யப்பட்டு கூட்டுத்தாபனத்திற்கு கையளிக்கப்படாதிருந்ததுடன் அதற்கான ரூபா 8,081,052 தாமதக் கட்டணத்தினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கொள்வனவு நடைமுறைகளைப் பின்பற்றி ஒப்பந்தகாரர் தெரிவுசெய்யப்பட்ட பின்னர், ஒப்பந்த விலையின் அடிப்படையில் கணிக்கப்பட்ட 6 சதவீத பங்குபற்றல் கட்டணத்தைச் செலுத்துவதற்கு இணங்கப்பட்டு அதற்காக ஒப்பந்த விலைக்கு ரூபா 2,061,000 கூட்டிய பெறுமதியின் மீது ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தது. மதியுரை பொறியியலாளராக அரசாங்க பொறியியலாளர் கூட்டுத்தாபனத்திற்கு 6 சதவீத மதியுரைக் கட்டணத்தைச்

செலுத்துவதற்கு உடன்பட்டிருக்கையில் ஒப்பந்தகாரருக்கு 6 சதவீத பங்குபற்றல் கட்டணத்தைச் செலுத்துவதற்கான காரணம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**3.4.2 அலுவலகக் கட்டிடம் மற்றும் களஞ்சிய அலுவலக இரு மாடிக் கட்டிடத்தை நிர்மாணித்தல்**

மேற்படி இரண்டு கட்டிடங்களையும் நிர்மாணிப்பதற்காக ஒப்பந்தக்காரரை தெரிவு செய்வதற்கு கொள்வனவு நடைமுறை பின்பற்றப்பட்டிருக்கவில்லை. ஒப்பந்த மதியுரைக் கம்பனி தயாரித்திருந்த முறையே ரூபா 40,249,323 மற்றும் ரூபா 8,650,538 ஆன பெறுமதிசேர் வரி அடங்கலான பொறியியலாளர் மதிப்பீட்டின் அடிப்படையில் மேற்குறித்த ஒப்பந்தகாரருக்கு இவ் ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தது.

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஒப்பந்த உடன்படிக்கையின் படி, அலுவலகக் கட்டிடம் 2010 செப்தெம்பர் 06 ஆந் திகதி நிர்மாண வேலைகள் பூர்த்திசெய்யப்பட்டு கையளிக்கப்பட வேண்டிய போதிலும்,2013 ஒக்தோபர் 15 ஆந் திகதி வரை நிர்மாண வேலைகள் பூர்த்திசெய்யப்பட்டு கையளிக்கப்படாதிருந்ததுடன் அதற்கான ரூபா 4,024,932 தாமதக் கட்டணத்தினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஒப்பந்த உடன்படிக்கையின் படி, களஞ்சிய மற்றும் அலுவலக இருமாடிக் கட்டிடம் 2012 சனவரி 20 ஆந் திகதி நிர்மாண வேலைகள் பூர்த்திசெய்யப்பட்டு கையளிக்கப்பட வேண்டிய போதிலும்,2013 ஒக்தோபர் 15 ஆந் திகதி வரை நிர்மாண வேலைகள் பூர்த்திசெய்யப்படாதிருந்ததுடன் அதற்கான ரூபா 865,053 தாமதக் கட்டணத்தினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மேற்படி இரண்டு ஒப்பந்தங்களிற்காக செலுத்தப்பட்ட 05 சிட்டைகளின் ரூபா 9,625,744 கூட்டுத்தொகையான சிட்டைகளை சான்றுறுதிப்படுத்த முன்னர் (on account) ஒப்பந்தகாரருக்குச் செலுத்தப்பட்டிருந்தது. இருப்பினும், சமர்ப்பிக்கப்பட்ட ஒப்பந்த கோவைகளின் படி அக் கொடுப்பனவை மேற்கொண்ட திகதிக்கு முந்திய திகதியினை இட்டு ஒப்பந்த மதியுரை நிறுவனத்தினால் சான்றுறுதிப்படுத்தப்பட்டிருந்தது.

## 4. கணக்களிப்பொறுப்பு மற்றும் நல்லாளுகை

### 4.1 கூட்டிணைந்த திட்டம்

2012 முதல் 2016 ஆம் ஆண்டு வரைக்குமான காலப்பகுதிக்கு தயாரிக்கப்பட்டிருந்த கூட்டிணைந்த திட்டத்தில் வருடாந்தம் 10 சதவீதம் - 15 சதவீதத்திற்கு இடைப்பட்ட அளவினால் மருந்து விற்பனையை அதிகரிப்பது நோக்கமாக காணப்பட்ட போதிலும், மீளாய்வாண்டில் மருந்து விற்பனை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 1.1 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது. மேலும், எதிர்வரும் 03 ஆண்டுகளிற்கான செயற்பாட்டு விளைவுகள் கூட்டிணைந்த திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.2 செயல்நடவடிக்கைத் திட்டம்

மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்தசெயல்நடவடிக்கைத்திட்டத்திலிருந்த கருமங்களை நிறைவேற்ற வேண்டிய காலங்கள் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

### 4.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

பணிப்பாளர் சபையால் அங்கீகரிக்கப்பட்ட 2012 ஆம் ஆண்டிற்குரிய பாதீடு மீளாய்வாண்டின் செப்தெம்பர் மாதம் மீண்டும் திருத்தப்பட்டிருந்தது.

பாதிடப்பட்ட 06 செலவினத் தலைப்புகள் தொடர்பில் உள்ளபடியான செலவினங்களில் 46 சதவீதம் முதல் 1040 சதவீதம் வரையிலும் சொத்துக்கள் தொடர்பாக 10 சதவீதம் முதல் 3017 சதவீதம் வரையிலும் வேறுபாடுகள் காணப்பட்டமையால் பாதீடானது பயனுள்ள முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்திக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட முறைகளினதும் கட்டுப்பாடுகளினதும் குறைபாடுகள் அவ்வப்போது கூட்டுத்தாபனத் தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகிறது.

(அ) ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்

(ஆ) மருந்துகளை விலையிடல்

(இ) உற்பத்தி நடவடிக்கைகள்

(ஈ) வரி

(உ) பாதீடு

(ஊ) நிர்மாணங்கள்

(எ) பெறவேண்டியவைகள்

(ஏ) கூட்டிணைந்த திட்டம்

(ஐ) சட்டங்கள் விதிகள் பிரமாணங்களுடன் இணங்கி ஒழுகுதல்

(ஒ) மனித வள முகாமைத்துவம்